அடிப்படைப் பாடநூல்

# தமிழ்

## வகுப்பு

## V

**Basic text - Tamil (BT)**

**Standard V**

கேரள அரசு
கல்வித்துறை

தயாரிப்பு

மாநிலக் கல்வியாராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் (SCERT), கேரளம்

**2016**

## தேசிய கீதம்

ஜன கண மன அதிநாயக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா
பஞ்சாப சிந்து குஜராத மராட்டா
திராவிட உத்கல பங்கா
விந்திய ஹிமாசல யமுனா கங்கா
உச்சல ஜலதி தரங்கா
தவ சுப நாமே ஜாகே
தவ சுப ஆசிஸ மாகே
காகே தவ ஜய காதா
ஜன கண மங்கள தாயக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா
ஜய ஹே! ஜய ஹே! ஜய ஹே!
ஜய ஜய ஜய ஜய ஹே!

*- மகாகவி இரவீந்திரநாத் தாகூர்*

## உறுதிமொழி

இந்தியா எனது நாடு. இந்தியர் அனைவரும் எனது உடன்பிறந்தோர்.

எனது நாட்டை நான் உயிரினும் மேலாக மதிக்கிறேன். அதன் வளம் வாய்ந்த பல்வகைப் பரம்பரைப் புகழில் நான் பெருமைகொள்கிறேன். அதற்குத்தக நான் என்றும் நடந்துகொள்வேன்.

என் பெற்றோர், ஆசிரியர், மூத்தோர் இவர்களை நான் நன்கு மதிப்பேன்.

எல்லாருடனும் நான் பண்புடன் பழகுவேன். எனது நாட்டினிடமும் நாட்டு மக்களிடமும் பக்தியுடன் இருப்பேன் என உறுதி கூறுகிறேன். அவர்களின் நலத்திலும் வளத்திலும்தான் எனது இன்பமும் அடங்கியிருக்கிறது.

**Prepared by** :
State Council of Educational Research and Training (SCERT)
Poojappura, Thiruvananthapuram - 695 012, Kerala
*Website:* www.scertkerala.gov.in
*e-mail:* scertkerala@asianetindia.com
Phone : 0471 - 2341883, Fax: 0471 - 2341869
*First Edition*: 2014, Reprint : 2016
*Type setting*: SCERT Computer Lab
*Printed at*: KBPS, Kakkanad, Kochi - 30

© Government of Kerala • Department of Education

**அன்புள்ள மாணவர்களே,**

தாய்க்கு நிகரான ஒன்றுதான் தாய்மொழியும். தாயிடம் காட்டும் அன்பும் ஆதரவும் தாய்மொழியிடமும் காட்டவேண்டும்.

தாய்மொழியாம் தமிழ்மொழி காலத்தால் மிகப் பழமையானது; தனிச்சிறப்பு மிக்கது. பழம்பெரும் உலக மொழிகளுக்கு இணையான இலக்கண இலக்கிய வளம் தமிழ்மொழிக்கு உண்டு. தமிழின் அடிப்படை அருமை பெருமைகளைத் தெரிந்துகொள்ளவும் தமிழ்மொழியைப் பல்வேறு நிலைகளில் கையாளுவதற்குரிய திறன்களைப் பெறுவதற்கும் ஏற்ற வண்ணம் இப்பாடநூல் வடிவமைக்கப்பட்டுள்ளது. வாசித்தும் எழுதியும் சிந்தித்தும் செயல்பட்டும் நாம் அடையவேண்டிய அறிவையும் ஆற்றலையும் திறன்களையும் பெறுவோமாக.

வாழ்த்துகள்,

**முனைவர். பி.ஏ.பாத்திமா**
இயக்குநர்
மாநிலக் கல்வியாராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம்
திருவனந்தபுரம்

# Textbook Development Committee

## Tamil - V (BT)

*Members*

Aji Prakash, M.H., GHS, Koovakkadu, Kollam.

Joseph Manoranjan, I., GLPS, Chottupara, Idukki.

Kaleel Rahiman, A., BGHSS, Vannamadai, Palakkad.

Manivannan, C., GTLPS, Chalai, Thiruvananthapuram.

Prabhu, A., GUPS, Karimtharuvi, Idukki.

Raj, S.T., GUPS, Vandiperiyar, Idukki.

Sreenivasan, KKMHS, Vandithavalam, Palakkad.

*Experts*

Dr. Gomathy Nayagam, E., Guest. Lr. University of Madras, Chennai.

Dr. Meeran Pillai, M.M., Prof., (Rtd.), University Collage, Thiruvananthapuram.

Dr. Nainar, M., Reader., (Rtd.), University Collage, Thiruvananthapuram.

Dr. Parasuraman, T., Prof., PILC, Pondichery.

Dr. Rajaram, S., Prof.,(Rtd.), Tamil University, Thanjavur.

Dr. Ratnasabapathy, P., Prof.(Rtd.), Chennai.

Dr. Veerappan, P., Prof., (Rtd.), NCERT, Mysore.

*Artists*

Mohanan, J., Spl.Tr., (Rtd.), Nedumangad.

Subin, M.S., Artist, Kollam.

RadhaKrishnan, P., Artist, Neyar Dam, Thiruvananthapuram.

*Academic Co-ordinator*

Dr. Sahaya Dhas D, Research Officer, SCERT.

**State Council of Educational Research and Training(SCERT)**
Poojappura, Thiruvananthapuram - 695 012.

# உள்ளடக்கம்


பக்கம்

1. ஒரே ஒரு ஊரிலே ........ 7 - 20
- இப்பொழுது புரிகிறதா? ........ 8
- தெரிந்தால் சொல்லுங்கள் ........ 13
- நாட்டுப்புறப் பாடல்கள் ........ 18

2. நாங்கள் நினைத்தால் ........ 21 - 34
- தர்மம் தலைக்காக்கும் ........ 22
- விடிவெள்ளிகள் ........ 25
- சாரணர் இயக்கம் ........ 31

3. அதிசய உலகம் ........ 35 - 47
- செய்திகள் பேசுகின்றன ........ 36
- அலைபேசியின் கதை ........ 42
- வானொலி ........ 46

அகரமுதலி ........ 48

# இந்திய அரசியலமைப்புச் சட்டம்

பாகம் 4 அ

## இந்தியக் குடிமக்களின் அடிப்படைக் கடமைகள்

51 அ  பிரிவுக்கூறு

(அ) இந்திய அரசியலைமைப்புச் சட்டத்துக்கு இணங்கி ஒழுகுதலும், அதன் உயரிய நோக்கங்களையும் நிறுவனங்களையும் மற்றும் தேசியக் கொடியையும் தேசிய கீதத்தையும் மதித்தலும்;

(ஆ) நம் நாட்டின் விடுதலைப் போராட்டத்திற்கு எழுச்சியூட்டிய உயர்ந்த எண்ணங்களை நெஞ்சில் நிறுத்திப் பின்பற்றுதல்;

(இ) இந்தியாவின் இறையாண்மையையும் ஒற்றுமையையும் நேர்மையையும் நிலைநிறுத்திக் காப்பாற்றுதல்;

(ஈ) இந்திய அரசு வேண்டும்போது நாட்டைப் பாதுகாக்கவும் நாட்டுக்காகத் தொண்டு புரியவும் தயாராயிருத்தல்;

(உ) சமயம், மொழி, வட்டாரம், இன வேற்றுமைகள் வரம்பு மீறுகிற நிலையில் அதற்கு எதிராக எல்லா இந்திய மக்களிடையேயும் நல்லிணக்கத்தையும், பொதுவான உடன்பிறப்பு உணர்வையும் வளர்த்தல்; பெண்மையின் மதிப்புக்கு இழிவு ஏற்படுத்தும் செயல்களை விட்டொழித்தல்;

(ஊ) நமது கலவைப் பண்பாட்டின் உயர்ந்த மரபை மதித்துப் பேணுதல்;

(எ) காடுகள், ஏரிகள், ஆறுகள், வனவிலங்குகள் உள்ளிட்ட இயற்கையான சுற்றுப்புறச் சூழலைப் பாதுகாத்து மேம்படுத்தலும், வாழும் உயிர்கள் மீது இரக்கம் கொள்ளுதலும்;

(ஏ) அறிவியல் சார்ந்த மனப்பாங்கு, மனிதநேயம், விசாரித்து அறியும் உள்ளறிவுத்திறம், சீர்திருத்தத்திறம் ஆகியவற்றை வளர்த்தல்.

(ஐ) பொது உடைமைகளைப் பாதுகாத்தலும் வன்முறையை விட்டொழித்தலும்;

(ஒ) பெரும் முயற்சிகள் சாதனைகளின் உயர்ந்த படிகளை நோக்கி இடைவிடாமல் முன்னேறத்தக்க வகையில் தனிமனித கூட்டு நடவடிக்கையின் எல்லாப் பரப்புகளிலும் முதன்மை நிலை எய்த முயலுதல்;

(ஓ) ஆறு வயதிற்கும் பதினான்கு வயதிற்கும் இடைப்பட்ட பருவமுள்ள தன் குழந்தைக்கு, அதன் பெற்றோர் அல்லது பாதுகாவலர் கல்விக்கான வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுத்தல்;

ஆகிய இவையனைத்தும் ஒவ்வொரு இந்தியக் குடிமகனின் அடிப்படைக் கடமைகளாகும்.

1

# ஒரே ஒரு ஊரிலே



**‘நாட்டின் உயிர்நாடி கிராமங்கள்’**

# இப்பொழுது புரிகிறதா?

அரண்மனைக் காவலன் ஒருவனுக்குத் திடீரென்று ஒரு நாள் சந்தேகம் வந்துவிட்டது. அவன் தன்னுடைய அரசரிடம்போய்,



''மகாராஜா, தங்களுடைய ராஜ்யத்தில் எல்லாம் சரிதான். ஆனால், உங்கள் அரண்மனையில் வேலை பார்க்கும் எனக்கு மாத்திரம் மாதம் அறுபது ரூபாய் சம்பளம் கொடுக்கிறீர்கள்; அமைச்சருக்கோ மாதம் ஆயிரம் ரூபாய் சம்பளம் கொடுக்கிறீர்கள்! எல்லாக் குடிமக்களையும் சமமாக நடத்தும் நீங்கள், சம்பள விஷயத்தில் மாத்திரம் ஏன் வித்தியாசம் காட்டுகிறீர்கள்?" என்று கேட்டான்.

மகாராஜாவுக்கு கோபம் வந்துவிட்டது. ஆனாலும் அவனுக்கு ஒரு பாடம் கற்பிக்க நினைத்தார். "அப்படியா! பேஷ். சரியான கேள்வி. உனக்கு இதைப்பற்றிச் சரியாகச் சொல்லுகிறேன். முதலில் நீ ஒரு காரியம் செய்ய வேண்டும்; அதோ பார், அங்கே ஒரு வண்டி போகிறதல்லவா? அதில் என்ன போகிறது என்று விசாரித்து விட்டுவா" என்றார்.

காவலன் ஓடினான்.

கொஞ்ச நேரத்தில் திரும்பிவந்து, “மகாராஜா, நெல் பாரம் வைத்துப் போகிறது” என்று சொன்னான்.

“அப்படியா; எங்கே போகிறது?” என்று கேட்டார் ராஜா.

“அய்யோ; அதைக் கேட்க மறந்துவிட்டேனே!” என்று மீண்டும் ஓடினான்.

திரும்பிவந்து, “மகாராஜா, அது பிரம்மதேசம் போகிறதாம்” என்றான்.

“அப்படியா; எங்கிருந்து போகிறதாம்?” அடடா; அதைக் கேட்க மறந்திட்டேனே” என்று மறுபடியும் ஓடினான்.

திரும்பி வந்து, “மகாராஜா; அது ரங்க சமுத்திரத்திலிருந்து பிரம்மதேசம் போகிறதாம்” என்று சொன்னான்.

“அப்படியா; அது என்ன நெல்?”

“அதைக் கேட்க மறந்துவிட்டேனே” என்று மறுபடியும் ஓட ஆரம்பிக்கும்போது. அங்கே தற்செயலாய் மந்திரி வந்து சேர்ந்தார்.



மகாராஜா காவலனை உட்காரச் சொல்லிவிட்டு, அமைச் சரிடம், "இந்தப் பக்கமாக ஒரு பாரவண்டி கொஞ்ச நேரத் துக்கு முன்னால் போனது. அது எங்கே போகிறது என்று பார்த்துவிட்டு வாரும்" என்று சொன்னார்.

அமைச்சர் நிதானமாகப் புறப்பட்டுப் போய், சிறிது நேரம் கழித்து வந்து,

"மகாராஜா, அந்த வண்டி ரங்க சமுத்திரத்திலிருந்து பிரம் மதேசம் போகிறது. நெல் பாரம். யானை கொம்பன் நெல். கோட்டை விலை ஏழரை ரூபாய். மழை காரணமாகப் பாதைகள் சரியில்லாததால் வண்டி இந்த வழியாகப் போகிறது. வண்டி ஓட்டிக் கொண்டு போகிறவனின் பெயர் வெள்ளையத்தேவன், தளவாய்த்தேவனின் மகன், சொந்த ஊரே ரங்க சமுத்திரந்தானாம். வயது இருபத்தைந்து இருக் கும்." இப்படிப் பல விஷயங்களைச் சொல்லிக்கொண்டே போய்க் கடைசியாக, "கவனித்ததில், அவனிடம் வித்தியா சமாக ஒன்றும் தோன்றவில்லை எனக்கு. மேற்கொண்டு தங்கள் உத்தரவுக்குக் காத்திருக்கிறேன்" என்றார் அமைச்சர்.

காவலனுக்கு ஒரே ஆச்சரியமாய்ப் போய்விட்டது. மந்திரி போனபின் மகாராஜாவிடம் அவன் சொன்னான், மகாராஜா நம்முடைய அமைச்சர் எவ்வளவு கெட்டிகாரராக இருக் கிறார்!" என்று தன்னுடைய ஆச்சரியத்தையும், மகிழ்ச்சி யையும் வெளியிட்டான்.

"இப்பொழுது புரிகிறதா. உனக்கும் அமைச்சருக்கும் உள்ள சம்பள வித்தியாசம்?" என்று கேட்டார் ராஜா.

ஹி... ஹி... என்று சிரித்து, சரிதான் என்ற பாவனையில் தலையாட்டினான் அரண்மனைக் காவலன்.

**– நாட்டுப்புறக் கதை**


## செயல்பாடுகள்

- குழுக்களாகப் பிரிந்து கதையை வாசித்து அதில் வரும் கருத்து களைக் கலந்துரையாடிக் குறிப்பேட்டில் எழுதவும்.
- பள்ளி நூலகத்திலிருந்து இதுபோன்ற குறுங்கதைகளைத் தேர்வு செய்து வாசியுங்கள். வகுப்பில் சொல்லுங்கள்.
- அரண்மனைக் காவலனும் அரசனும் பேசிக்கொண்டதை வகுப்பில் நடித்துக் காட்டுங்கள்.

# யானைச்சாமியும் பாகச்சாமியும்

ஒரு சாமியார் சீடர்களுக்கு உபதேசம் செய்தார். "கடவுள் அங்கிங்கெனாதபடி எங்கும் இருக்கிறார். எல்லா உயிர் களும் இறைவன் அம்சம். எனவே எல்லா உயிர்களையும் கடவுளாகக் கருதி வழிபட வேண்டும்."

உபதேசம் கேட்ட சீடன் ஒருவன் ஒரு நாள் கடை வீதிக்குச் சென்றான். எதிரே கோயில் யானையொன்று மதம் பிடித்து ஓடி வந்தது. பாகனோ யானையைக் கட்டுப் படுத்த முடியாமல் பின்னால் ஓடி வந்து மக்களை எச்சரித் தான். சீடனோ யானையைக் கண்டதும் குரு கூறியபடி கடவுள், யானை வடிவில் வருகிறது என்று கை கூப்பிக்கொண்டு யானை யின் அருகில் சென்றான். பாகனோ, "யானை மதம் பிடித்து வரு கிறது, நெருங்கா தீர்கள்'' என்று எச்சரித்தான். சீடனோ பாகன் கூறியதைப்



பொருட்படுத்த வில்லை. யானை சீடனைத் தூக்கி எடுத்து வீசியது. விழுந்து எழுந்த சீடன் நொண்டிக்கொண்டே மடத்துக்குச் சென்று குருவிடம் நடந்ததைக் கூறினான். அதற்கு அவர் சொன்னார்:

“யானைச்சாமியை நீ கடவுளாகக் கருதி வணங்கியது சரி; ஆனால் பாகன் உருவில் வந்த சாமியின் எச்சரிக்கையை நீ அலட்சியம் செய்யலாமோ? பாகச் சாமியின் பேச்சைக் கேளாததால் நீ இந்தக் கஷ்டத்தை அனுபவிக்கத்தான் வேண்டும்” அருகில் இருந்தவர்களெல்லாம் கொல்லென்று சிரித்தார்கள்.

**- சாதுவன்**

## செயல்பாடுகள்

- கதைக் கருத்தைக் கலந்துரையாடிக் குழுக்களில் அதைச் சுருக்கமாகச் சொல்லுங்கள்.
- இதுபோன்ற குறுங்கதைகளைச் சேகரித்துக் கதைத் தொகுப்பு ஒன்றைத் தயார் செய்யுங்கள்.

# தெரிந்தால் சொல்லுங்கள்

வளவூர் என்ற கிராமத்தில் கதிரேசன் என்பவர் வேளாண் அலுவலராகப் பொறுப்பேற்றார்.

“இந்த ஊர் பட்டிக்காடாக உள்ளதே! எழுதப் படிக்கத் தெரிந்தவர் யாரும் இருக்க மாட்டார்கள் போலத் தெரிகிறதே. எப்படித்தான் இங்கே பொழுது போகப் போகிறதோ? தெரியவில்லையே!” என்று தனக்குள் அலுத்துக் கொண்டார் அவர்.

கிராமத்தைச் சுற்றிப் பார்த்துவிட்டு வரலாம்; தான் வந்திருப்பதைக் கிராம மக்களுக்குத் தெரியப்படுத்தலாம் என்று புறப்பட்டார் அவர். ஒரு வீட்டுத் திண்ணை யில் பெரியவர் ஒருவர் அமர்ந்திருந்தார். அவரிடம் சென்ற அலுவலர், உங்கள் தோட்டத்திலுள்ள செடிகளுக்கோ, மரங்களுக்கோ எந்த நோய் வந் தாலும் கவலைப்பட வேண்டாம் என்னை



அழையுங்கள். உடனே சரிசெய்து விடுகிறேன்” என்று பெருமையுடன் சொன்னார்.

“சரி! அப்படியே செய்கிறேன்” என்றார் அந்தப் பெரியவர்.

பேச்சைத் தொடர்ந்த அலுவலர் “உங்கள் தோட்டத்தில் எத்தனை நெல்லி மரங்கள் உள்ளன?” என்று கேட்டார்.

“என் தோட்டத்தில் உள்ள மரங்களில் பத்தைத் தவிர எல்லாமே நெல்லி மரங்கள் தான்” என்றார் அவர்.

எண்ணிக்கையைச் சொல்லாமல் இப்படி மொட்டையாகச் சொல்கிறாரே, மற்ற மரங்களின் எண்ணிக்கையைக் கேட்போம். பிறகு “நான் யார் என்பதை இவருக்குக் காட்டு கிறேன்” என்று தனக்குள் நினைத்தார் அலுவலர்.

“எத்தனை நெல்லி மரங்கள் என்று சொல்ல உங்களுக்கு விருப்பம் இல்லை. எத்தனை அத்தி மரங்கள் உள்ளன? அதன் எண்ணிக்கையையாவது சொல்லுங்கள்” என்றார்.

“என் தோட்டத்தில் உள்ள மரங்களில் பத்தைத் தவிர எல்லாமே அத்தி மரங்கள்தான்” என்றார் அவர்.

“சொன்னதையே திரும்பச் சொல்கிறாரே? இவருக்கு என்ன பைத்தியமா? மேலும் ஒரு கேள்வி கேட்போம்” என்று நினைத்தார் அலுவலர்.

“உங்கள் தோட்டத்தில் எத்தனை பலா மரங்கள் உள்ளன?” என்று எரிச்சலுடன் கேட்டார்.

இப்பொழுதும் அவர் “என் தோட்டத்தில் உள்ள மரங்களில் பத்தைத் தவிர எல்லாமே பலா மரங்கள்தான்” என்றார்.

“பேசியதையே திரும்பத் திரும்பப் பேசுகிறாரே இவருக்கு உண்மையிலேயே பைத்தியம் தான்” என்று முனு முனுத்தார் அலுவலர்.

அங்கிருந்த இன்னொரு பெரியவர் "தம்பி! நீங்கள் நினைப்பது போல அவர் பைத்தியம் இல்லை. அவர் தோட்டத்தில் உள்ள மரங்களின் எண்ணிக்கையை உங் களிடம் சொன்னார்" என்றார்.


எப்படி எப்படியோ சிந்தித்துப் பார்த்தார் அலுவலர்.

அவரால் எத்தனை நெல்லி, எத்தனை அத்தி, எத்தனை பலா மரங்கள் உள்ளன என்பதைக் கண்டுபிடிக்க முடிய வில்லை...

உங்களுக்குத் தெரிந்தால் அவருக்குச் சொல்லுங்களேன்.

## செயல்பாடுகள்

- குழுக்களாகப் பிரிந்து கட்டுரையில் இடம்பெற்றுள்ள மரங்களின் எண்ணிக்கையைக் கண்டுபிடியுங்கள்.
- இது போன்று சிந்தனையைத் தூண்டும் புதிர்க் கதைகளைச் சேகரித்து மலராக வெளியிடுங்கள்.



# விடுகதையாம் விடுகதை





பொட்டுப் போல் இலையிருக்கும்
பொரிபோலப் பூப்பூக்கும்
தின்னக் காய் காய்க்கும்
தின்னாத பழம் பழுக்கும்.

அது என்ன?

பக்கமெல்லாம் பட்டையுண்டு, மரமுமல்ல
பெயர்த்தெடுத்தால் முத்துண்டு, சிப்பியல்ல
உடைத்தெடுத்தால் விதையுண்டு பழமுமல்ல

அது என்ன?

கத்திபோல இலையிருக்கும்
கவரிமாப் பூப்பூக்கும்
தின்னப் பழம் பழுக்கும்
தின்னாத காய் காய்க்கும்

அது என்ன?

இரவு வீட்டிற்கு வருவான், இரவு முழுவதும் இருப்பான்
காலையில் சொல்லாமல் கொள்ளாமல் போய்விடுவான்.

– நிலா

ஒன்று போனால் மற்றொன்றும் வாழாது? – செருப்பு

பூ கொட்டக்கொட்ட ஒன்றையும் தனியே பொறுக்க முடியவில்லை? – மழை

மழையில் பிறந்தது வெயிலில் காயுது? – காளான்

நீண்ட உடம்புக்காரன், நெடுந்தூரப் பயணக்காரன்?

– ரயில்

## செயல்பாடுகள்

கீழே கொடுக்கப்பட்டுள்ள விடைகளுக்கு ஏற்ற விடுகதைகளை எழுதுங்கள்; வாசியுங்கள்.

- வாழை
- வானவில்
- பூசணிக்காய்

விடுகதைகளைத் திரட்டிப் பிற குழுக்களிடம் சொல்லிப் போட்டி நடத்துங்கள்.

கீழே கொடுக்கப்பட்டுள்ள விடுகதைகளுக்கான விடைகளைக் கண்டுபிடியுங்கள்.

- கத்தியால் வெட்டினாலும் வெள்ளையாய்ச் சிரிப்பான். அவன் யார்?
- மண்ணுக்குள்ளே கிடப்பான் மங்களகரமானவன். அவன் யார்?
- ஆடும் வரை ஆட்டம், ஆடிய பின் ஓட்டம் அது என்ன?
- கடல் நீரில் வளர்ந்து மழை நீரில் மடிவது என்ன?
- எங்க அக்கா சிவப்பு, குளித்தால் கருப்பு அது என்ன?

விடுகதைகளைத் தொகுத்து வகுப்பில் வாசித்து ‘விடுகதைத் தொகுப்பு’ உருவாக்குங்கள்.

JT 181-3/Tamil -5 (BT)

# நாட்டுப்புறப் பாடல்கள்

**தன்னானே னானே**



அறிவு என்னும் பாடத்தையே
தன்னானே னானே...
அழகாகக் கற்றுக்கொண்டேன்
தில்லாலே லேலோ...
கூட்டுறவாய் வாழ்ந்திடுவோம்
தன்னானே னானே...
நாட்டுயர்வைக் காட்டிடுவோம்
தில்லாலே லேலோ...

சாலையிலே நடக்கும்போது
தன்னானே னானே...
சாலைவிதியைக் கடைப்பிடிப்போம்
தில்லாலே லேலோ...
வாழ்க்கை எனும் பயணத்தையே
தன்னானே னானே...
வளமோடு காட்டிடுவோம்
தில்லாலே லேலோ...

தாயையும் தந்தையையும்
தன்னானே னானே...



தயவாகக் காத்திடுவோம்
தில்லாலே லேலோ...
பண்போடும் பாசத்தோடும்
தன்னானே னானே...
பழமையினைப் போற்றிடுவோம்
தில்லாலே லேலோ...
அன்போடும் அறிவோடும்
தன்னானே னானே...
அனைவரோடும் கூடிடுவோம்
தில்லாலே லேலோ...
பெரியோரை வாழ்த்திடுவோம்
தன்னானே னானே...
பெருமையோடு வாழ்ந்திடுவோம்
தில்லாலே லேலோ...





தொகுத்தவர் - புனிதா கணேசன்

## செயல்பாடுகள்


- பாடலை மெட்டுடன் பாடுங்கள்.
- கவிதையை முழுமையாக்குங்கள்.

பள்ளி சென்று பாடங்களை
தன்னானே னானே......
____________________________
____________________________

- இது போன்ற நாட்டுப்புறப் பாடல்களை நூலகங்களிலிருந்து திரட்டி தொகுப்பு உருவாக்குங்கள்.

பாடி மகிழுங்கள்

# ரோஜாப்பூ



பாரு பாரு ரோஜாப்பூ
பாங்காய் மலர்ந்த ரோஜாப்பூ
நேரு கோட்டை அலங்கரிச்ச
நேர்த்தியான ரோஜாப்பூ
செக்கச் சிவந்த ரோஜாப்பூ
சிந்தையள்ளும் ரோஜாப்பூ
அக்கம் பக்கம் முள்ளிருக்கும்
அருமையான ரோஜாப்பூ
உனக்கும் ஒன்னு பறிச்சிக்கோ
உதிர்ந்திடாம பார்த்துக்கோ

தொகுத்தவர். கு. சந்திரன்

**நான் கற்றுக்கொண்டவை.**

| துணைக் கருத்துகள் | மிகநன்றாக | நன்றாக | ஓரளவு |
|---|---|---|---|
| குழுச்செயல்பாடுகளில் முழுமையாகப் பங்குகொண்டேன். | | | |
| பள்ளி நூலகத்திலிருந்து நூல்களைத் தேர்வுசெய்து வாசித்தேன் | | | |
| விடுகதைத் தொகுப்பு தயாரித்தேன். | | | |

2

# நாங்கள் நினைத்தால்



‘முயற்சி திருவினை யாக்கும் முயற்றின்மை
இன்மை புகுத்தி விடும்’



# தர்மம் தலை காக்கும்

குருஷேத்திர யுத்தத்தில் மிக முக்கியமான நாள் கர்ணன் போரிட வந்த நாள்தான். அன்றைய நாள் போரின் வெற்றியை நிர்ண யிக்கிற நாள் என்று எல்லோரும் எதிர்பார்த் தனர். கர்ணன் வாரி வழங்கும் வள்ளல் மட்டு மன்று; வில்லிலும் வல்லவன்தான். அர்ச்சு னனுக்கேற்ற சவால் இவனே.

அந்தக் குறிப்பிட்ட நாள் வந்தது. போர்க் களத்தில் கர்ணனும் அருச்சுனனும் நேருக்கு நேர் மோதினார்கள். கர்ணனின் நாகாஸ்தி ரத்திலிருந்து அருச்சுனன் தப்பித்துக் கொண் டான். எல்லாம் கிருஷ்ணனின் சமயோஜித அறிவுதான்.

பிறகு அருச்சுனன் கர்ணன் மேல் அம்புகளைச் சரசரவென்று விடுகின்றான். ஆனால் அவற் றில் ஒன்றுகூட கர்ணனின் உடம்பைத் துளைக்கவில்லை. மாறாக அவையாவும் அவனது கழுத்தில் பூமாலைகளாக விழு கின்றன. அம்பு விட்டு விட்டுச் சோர்ந்து போனான் அருச்சுனன்.

“என்ன செய்யலாம். இவனைக் கொல்ல முடியவில்லையே. அம்புகள் பூமாலைகளாக விழுகின்றனவே! ஏன்?” என்று ஆச்சரியத்தோடும் வருத் தத்தோடும் கேட்டான் அருச்சுனன்.

“எல்லாம் அவன் செய்த தர்மத்தின் பலன். தர்மம் தலைகாக்கும்” என்று கிருஷ்ணன் பதில் சொன்னான். “அப்படியானால் கர்ணனை எப்படிக் கொல்வது?” அருச்சுனனுக்கு சந்தேகம் எழுந்தது. அப்போது கிருஷ்ண னின் இன்னொரு சூழ்ச்சி. அந்தண வடிவில் வந்த இந்திரன் கர்ணனின் தர்மங்களின் பலனை யாசிக்கிறான். அத்தகைய ஒரு சூழ்நிலையிலும் இல்லை என்று சொல்ல கர்ணனால் இயலவில்லை. தன் தர்மத்தின் பலனைத் தானமாகக் கொடுக்கின்றான். தானமும் தர்மமும் போனபின் காப்பதற்கு என்ன இருக்கிறது? அர்ச்சுனன் எய்த அம்புகள் கர்ணனின் உடம்பைத் துளைக்கின்றன. கர்ணன் இறந்துவிடுகிறான்.

## செயல்பாடுகள்

- ‘தலைக்கு வந்தது, தலைப்பாகையோடு போனது’
  ‘நான் பிடித்த முயலுக்கு மூணு கால்’

  இதுபோன்ற பழமொழிகள் பேச்சு வழக்கில் கேட்டிருப்பீர்கள். உங்கள் வட்டாரத்தில் பயன்படுத்தும் பழமொழிகளைத் திரட்டுங்கள். வகுப்பில் வெளியிடுங்கள்.


- ‘அறம் செய விரும்பு’ - இக்கூற்றின் பொருளைக் குழுக்களில் கலந்துரையாடிச் சொல்லுங்கள்.

- பின்வரும் சொற்களைப் பொருத்தமான இடத்தில் நிரப்புக.

| | | | |
|---|---|---|---|
| நின்றோம் | வந்தேன் | நடந்தான் | கூடினோம் |
| வாழ்ந்தான் | கேட்டேன் | முயன்றோம் | சிரித்தேன் |
| பேசினோம் | பேசினான் | ஓடினேன் | மறுத்தான் |

| நான் | நாங்கள் | எழிலன் |
|---|---|---|
| ____________ | ____________ | ____________ |
| ____________ | ____________ | ____________ |
| ____________ | ____________ | ____________ |
| ____________ | ____________ | ____________ |

# நாலடியார்



நாய்க்கால் சிறுவிரல்போல் நன்கணிய ராயினும்
ஈக்கால் துணையும் உதவாதார் நட்பென்னாம்
சேய்த்தானும் சென்று கொளல்வேண்டும் செய்விளைக்கும்
வாய்க்கால் அனையார் தொடர்பு.

**– சமண முனிவர்**

**நூல் குறிப்பு :**

பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று நாலடியார். இந்நூல், நானூறு பாடல்களைக் கொண்டது. அறக் கருத்துகளைக் கூறுவது. நாலடி நானூறு என்னும் சிறப்புப் பெயரும் இதற்கு உண்டு. இந்நூல், சமணமுனிவர்கள் பலர் பாடிய பாடல்களின் தொகுப்பு.

## செயல்பாடுகள்

- யாரோடு நட்புக்கொள்ளுதல் நன்றென சமண முனிவர் கூறுகிறார்?
- ஆசிரியரின் உதவியோடு பாடலின் பொருள் அறிந்து குறிப்பேட்டில் எழுதுங்கள்.
- பதினெண் கீழ்க்கணக்கு நூல்களைப் பட்டியலிடுங்கள்.



# விடிவெள்ளிகள்

குழந்தைகளின் ஆளுமை மற்றும் தலைமைப் பண்புகளை வளர்க்கும் விதத்திலும் பள்ளிக் குழந்தைகளுக்கு இன்றைய சமூக நிலையை உணர்த்தவும் தொடங்கப்பட்டதுதான் குழந்தைகள் பாராளுமன்றம். அந்த வகையில் செயல்படும் கிராமத்துக் குழந்தைகளின் பாராளுமன்றம் மூலம், கிராமத்துக்கு மின் வசதியை அளித்து ஒளியேற்றி இருக்கிறார்கள் குழந்தைகள்.

“ரமேஷ், கண்ணன், லட்சுமி! பாராளுமன்றம் கூடப் போகுது வட்டமா உட்காருங்க. அவைத் தலைவராக உள்துறை அமைச்சர் ஆனந்தராஜை முன் மொழிகிறேன்'' என்று பிரதமரான 5 ஆம் வகுப்பு இளங்கோவன் சொல்ல, நாங்கள் வழி மொழிகிறோம்னு எல்லா அமைச் சர்களும் சொன்னார்கள். ''இந்த

மாதக் கூட்டத்துல கிராமத்துத் தெரு ஓரம் இருக்கிற குப்பைக் கழிவுகளைச் சுத்தம் செய்ய வேண்டும் என்ற தீர்மானம் நிறைவேற்றுவோம்" என்று அவைத் தலை வரான குழந்தை மொழிந்தது.

ஒவ்வொரு மாதமும் 17 ஆம் தேதி கூட்டம் போடுவோம். உறுப்பினர்களின் ஒப்புதலோடு, அவைத் தலைவரைத் தேர்வு செய்வோம். ஒவ்வொரு கூட்டத்திலும் முந்தைய மாத அறிக்கையை உள்துறை அமைச்சர் வாசித்ததும், கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்படும். அயன்விரு சம்பட்டி ஊராட்சியில் இருந்து எங்கள் மாமுறையினார் புரம் கிராமத்துக்கு 3 கி.மீ. தூரம் பஸ் வசதி கிடையாது. அறுபது ஆண்டுகளாக விளக்கு வசதி கிடையாது. இரவில் கையில் சிம்மினி விளக்கு அல்லது டார்ச் லைட் உதவியுடன்தான் போக வேண்டும். வழியில் பூரான், பாம்பு, கீரின்னு கிடக்கும். பாம்பு கடித்து நிறைய பேர் இறந்திருக்கிறார்கள். இதனால, ஆறு மணிக்கு மேல் டியூசனுக்கே போக முடியாது. இதற்காகப் போன வருடம் மார்ச் மாதப் பாராளுமன்றக் கூட்டத்தில் தீர்மானம் நிறை வேற்றி, விண்ணப்பத்தைப் பஞ்சாயத்துத் தலைவரிடம் கொடுத்தோம்.

சின்னப் புள்ளைங்க எப்படி 'பவர்' கொண்டுவரப் போறீங் கன்னு? ஐயா கேட்டாங்க... அப்புறம், கையெழுத்துப் போட்டுக் கொடுத்தார். ஊரக வளர்ச்சி இயக்குநர், எம்.எல்.ஏ, கலெக்டர் என்று எல்லோருக்கும் மனு கொடுத்தோம். இதுக்காக ரொம்பவே அலைந்தோம். இப்போது 30 விளக்குக் கம்பங்கள் நட்டு விளக்குப் போட் டிருக்கிறார்கள்! மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறது. எங்கள் கிராமத்தில் மொத்தமே இரண்டு தண்ணீர்க் குழாய்தான் இருந்தன. இப்போது தெருவுக்கு ஒரு குழாய் இருக்கிறது.

குப்பை கொட்டுற இடங்களைச் சுத்தம் செய்து, அதில் மரக்கன்று நட்டு, தினமும் தண்ணீர் ஊற்றிப் பராமரித்து வருகிறோம் என்றார் உள்துறை அமைச்சர் ஆனந்தராஜ்.

கல்வித்துறை அமைச்சரான தமிழ்ச்செல்வன், “எங்கள் ஊரில் நூலகப் பெட்டி செய்து வைத்திருக்கிறோம். உறுப் பினர்களிடம் மாதம் ஒரு ரூபா சந்தா வசூல் செய்து, இது வரை 85 புத்தகங்கள் சேர்த்துள்ளோம். மாணவர்கள், உறுப் பினர்கள் மட்டும் அல்லாமல் ஊர் மக்களும் படிக்கலாம். 15 புத்தகங்கள் படித்து முடித்தவர்களுக்கு ஒரு பரிசு கொடுப்போம். பள்ளி குழந்தைகளுக்குத் தேர்வுக் கட்டணமும், நோட்டுப் புத்தகமும் நிதி அமைச்சர் நிதியில் இருந்து வாங்கிக் கொடுப்போம். தேர்வு விடு முறை, கோடை விடுமுறைகளில் பக்கத்து ஊர் மாணவர் களை அழைத்து, விளையாட்டுப் போட்டிகள் நடத்தி பரிசு வழங்குவோம். இதற்காக உள்ளூர் எம்.எல்.ஏ, அமைச்சர்கள், பஞ்சாயத்துத் தலைவர், கவுன்சிலர்களிடம் நன்கொடை வசூலித்து, விழாவுக்கு அவர்களையே சிறப்பு விருந்தினராக அழைப்போம்” என்றார்.

## செயல்பாடுகள்

- குழந்தைகளால் கிராமத்தில் ஏற்பட்ட மாற்றங்கள் என்னென்ன? குழுக்களில் கலந்துரையாடிக் குறிப்பு எழுதுங்கள்.
- உங்கள் பகுதியில் ஒரு நூலகம் அமைக்க என்னென்ன செய்வீர்கள்?
- உங்கள் பள்ளியில் குடிநீர் வசதியை மேம்படுத்தச் சொல்லி ஊராட்சிமன்றத் தலைவருக்கு ஒரு கடிதம் எழுதுங்கள்.

# உறுதிமொழிகள் பத்து

குழந்தைகளோடு உரையாடுவது என்றால் நமது முன்னாள் குடியரசுத் தலைவரும், விண்வெளி விஞ்ஞானியுமான டாக்டர் அப்துல்கலாம் அவர்களுக்கு மட்டற்ற மகிழ்ச்சியாய் இருக்கும். இந்தியாவை 2020 ஆம் ஆண்டு வல்லரசு நாடாக ஆக்க மாணவர்களால் மட்டுமே முடியும் என்று அதற்கான கனவைக் காண மாணவர்களிடம் அறைகூவல் விட்டவர் திரு. அப்துல் கலாம் அவர்கள். மாணவர்கள் ஒரு இலட்சியத்தை எதிர்கொண்டு, எதிர்வரும் தடைகளை நீக்கிச் சிறப்படைய வேண்டும் என்றார் அவர்.



குழந்தைகள் கூட நல்ல இயக்கங்களைத் தொடங்கித் தங்களது குடும்பங்களைப் பாதுகாக்கலாம் என்பது அவரது எண்ணம். குறிப்பாகச் சில பெற்றோர்கள் குடி, சூதாட்டம் போன்ற சில தீய பழக்க - வழக்கங்களுக்கு ஆளாகி விடுவதால் அவர்களும், அவர்களது குடும்பமும், குழந்தைகளும் துன்பத்திற்கு உள்ளாகின்றனர். இவற்றைத் தடுக்க குழந்தைகள் இயக்கமும் அரும் பங்காற்றலாம்.

இதன்மூலம் தமது பெற்றோரைக் காப்பாற்றுவதோடு தம்மைத் தாமேயும் காத்துக்கொள்ள இயலும். என்பது அவரது கருத்து.

தம் கருத்துகளை எடுத்துரைக்க கல்வி நிறுவனங்களுக்குச் சென்று அவர்களோடு உரையாடுவதை வழக்கமாகக் கொண்டுள்ளார் திரு.கலாம் அவர்கள்.

நாட்டின் எதிர்காலம் மாணவர்களின் கைகளில்தான் என்பதை நன்கு உணர்ந்தவர் அவர். ஒருமுறை மாணவர்களோடு அவர் உரையாடும்போது மாணவர்களுக்குப் பத்து

உறுதிமொழிகளைக் கடைப்பிடிக்கச் சொல்லிக் கொடுத்தார்.

நாம் மேற்கொண்டு வரும் கல்விப்பணியை அல்லது தொழிலைக் கவனமாகவும் சிரத்தையுடனும் செய்து அதில் நிபுணத்துவம் பெற வேண்டும்.

எழுதப் படிக்கத் தெரியாத குறைந்த பட்சம் பத்துப் பேருக்காவது அதைச் சொல்லிக் கொடுக்க முன்வரவேண்டும்.

குறைந்தது பத்து மரக்கன்றுகளையாவது நட்டுப் பராமரித்து வளர்த்து அவற்றை மரமாக்கவேண்டும்.

நாம் வாழும் இடத்துக்கு அருகிலுள்ள கிராமம் அல்லது நகர்ப்புறங்களில் போதை அல்லது சூதாட்டப் பழக்கத் திற்கு ஆளாகி துயருறும் குறைந்த பட்சம் ஐந்து பேரையாவது அதிலிருந்து மீட்க முயற்சிக்க வேண்டும்.

நம் சகோதர மனிதரின் துயரையும் வலியையும் துடைக்க நம்மால் இயன்றவற்றைச் செய்வதற்குத் தொடர்ந்து முயற்சிக்க வேண்டும்.



மதம், இனம், மொழி, ஜாதி ஆகியவற்றின் அடிப்படையில் மக்களைப் பிரித்து அரசியல் ஆதாயம் தேட முயற்சிக்கும் எந்த ஒரு அமைப்பையும் ஆதரிக்கக் கூடாது.

நாம் நேர்மையாக நடந்துகொள்வதோடு லஞ்சம் இல்லாத சமுதாயம் உருவாக நம்மால் இயன்ற முயற்சிகளை எல்லாம் செய்யவேண்டும்.

ஞானமும் விவேகமும் நிறைந்த அறிவார்ந்த பண்பட்ட குடிமகனாக வாழ முயற்சி செய்வதோடு நம் குடும்பத்தைச் சேர்ந்தவர்களும் நேர்மையான வழியில் நடந்துகொள்ள அவர்களை ஊக்குவிக்க வேண்டும்.

உடல் ஊனம் மற்றும் மன வளர்ச்சி குன்றியவர்களின் உண்மையான தோழனாக நடந்துகொள்வதோடு இயன்றவரை நம்மைப் போலவே அவர்களும் இயல்பான வாழ்க்கையை மேற்கொள்ள உண்மையாக உழைக்க வேண்டும்.

நமது நாடு மற்றும் சக குடிமக்களின் வெற்றிகளை மகிழ்ந்து கொண்டாட வேண்டும்.

இவைதான் அந்த உறுதிமொழிகள்.

இந்தப் பத்து உறுதிமொழிகளையும் ஒவ்வொரு மாணவனும் பின்பற்றினால் நாடு சிறக்கும்; நாமும் சிறப்போம்.

## செயல்பாடுகள்

- உங்கள் பள்ளியில் செயல்படுகின்ற மன்றங்களின் பெயர்களைப் பட்டியலிடுங்கள். அவைகளின் சேவைகளைப் பற்றிக் குறிப்புத் தயாரியுங்கள்.
- அறிஞர்களின் பொன்மொழிகளைத் திரட்டுங்கள்; தொகுப்பு உருவாக்குங்கள்.
- தமிழ் அறிஞர்களின் படங்களைத் திரட்டிப் படத்தொகுப்பு உருவாக்குங்கள்.

# சாரணர் இயக்கம்



காலை 9. 30 மணி. பள்ளியின் நீண்ட மணியோசையைக் கேட்ட மாணவர்கள் வரிசைவரிசையாக மைதானத்தை நோக்கி நடந்தார்கள். ஆசிரியர்கள் அவரவர் வகுப்பிலுள்ள குழந்தைகளை வரிசையாகவும், அமைதியாகவும் நிற்கவைத்துக் கொண்டிருந்தார்கள். தலைமையாசிரியர் வந்தவுடன் பள்ளிக்கூட்டம் ஆரம்பமானது. அனைவரும் ஒன்றாகக் காலை வணக்கம் சொன்னார்கள். பின்னர் இறைவணக்கப் பாடல் பாடப்பட்டது. தலைமையாசிரியர் உரையாற்றினார். அதனைத் தொடர்ந்து 'உங்களுக்கு ஒரு தகவல்' பகுதியை மாலதி வாசித்தாள்.

''மதிப்பிற்குரிய தலைமையாசிரியர் அவர்களே! ஆசிரியப் பெருமக்களே! அன்பு நண்பர்களே! அனைவருக்கும் வணக்கம். நான் இன்று உங்களுக்கு அளிக்கப் போகும் தகவல் 'சாரணர் இயக்கம்' பற்றியதாகும்.

சின்னஞ்சிறு மீன்கள் கூட்டம் நினைத்தால் ஒரு கப்பலையே மூழ்கடித்துவிடும் என்பதே சாரணர் இயக்கத்தின் தத்துவம். இந்த இயக்கத்தை இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்த பேடன் பவுல் (1897 – 1941) என்பவர் தோற்றுவித்தார். பதினொன்று வயதிற்கு மேற்பட்ட சிறுவர்களுக்கு (12 முதல் 17 வயது வரை) பயிற்சி கொடுத்தால், முதலுதவி போன்ற செயல்களைச் செய்யலாம் என்று எண்ணினார் அவர். 1908 இல் மாணவர்களுக்காகவும், 1910 இல் மாணவியருக்காகவும் இவ்வியக்கம் தொடங்கப்பட்டது.

1917 இல் அன்னிபெசன்ட் அம்மையார் சாரண - சாரணீய இயக்கத்தை இந்தியாவில் தொடங்கினார். இவ்வியக்கமானது ஒற்றுமை, கடமை தவறாமை, உதவி செய்தல் போன்ற நற்பண்புகளை வளர்க்கும் என உறுதியாக இருந்தார்.



சாரண இயக்கத்திற்கென ஒரு முத்திரை உள்ளது. ஒவ்வொரு சாரணியரும் அச்சின்னத்தை அணிந்தி ருக்க வேண்டும். சார ணச் சீருடையில் கழுத்திலுள்ள நீல நிற ஸ்கார்ஃப் கீழே விழாதபடி பேட்ஜ் சொருகி வைத்தி ருப்பர். மேலும் பெல்ட், தொப்பி, கேன்வாஸ் ஷூ அணிவதும் அவசியமாகும்.

சாரணர் ஒருவரை ஒருவர் காணும்போது வலதுகை யால் வணக்கத்தைத் தெரிவிப்பர். சிறுவிரலை, பெரு விரலால் பிடித்து, மூவிரலை நெற்றியில் வைத்து வணக்கம் தெரிவிப்பது வழக்கம். கைகுலுக்கும்போது இதயத்தின் பிரதிபலிப்பாய் இடதுகைகொண்டே கைகுலுக்க வேண்டும்.

மாணவர்களுக்கு விடுமுறை நாட்களில் பயிற்சி தரப் படுகிறது. வெளியூர்களில் முகாமிட்டுப் பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. அந் நாட்களில் பல்வேறு நட்புற வுகளைப் பெறுகிறார்கள். பயிற்சியின் முடிவில்

விளையாட்டுப் போட்டிகள், கலைநிகழ்ச்சிகள் போன்றவை நடத்தப்படுகின்றன.

பயிற்சி முடித்த மாணவர்கள் பயிற்சியுடன் நின்றுவிடாமல் தொண்டுகளும் புரிவர். விழாக்களில் மக்களை வழிநடத்துதல், அனாதைகள், நோயாளிகள், முதியவர்களுக்கு உதவுதல், சாலைகளைச் சீரமைத்தல், மரங்களை நடுதல், வளாகங்களைச் சுத்தப்படுத்துதல் போன்ற சேவைகளில் குழுவாகச் செயல்படுகின்றனர்.

சாரணர் இயக்கம் சிறுவர்களுக்கான இயக்கமாக இருந்தாலும் அவர்களைச் சிகரங்களுக்கு அழைத்துச் செல்கின்ற இயக்கமாகும். ஒற்றுமையின் விளைநிலமாகவும் சமுதாய எழுச்சிக்கு வழிகாட்டியாகவும் சாரணர் இயக்கம் இருக்கும் என்பதில் ஐயம் இல்லை. நன்றி, வணக்கம்."

தலைமையாசிரியர் மாலதியைப் பாராட்டினார். பள்ளிக் கூட்டம் நிறைவுபெற்றது. அனைவரும் அவரவர் வகுப்பறைக்குச் சென்றனர்.

## செயல்பாடுகள்

- சாரணர் இயக்கம் பற்றி மாலதி அளித்த தகவல்களைக் குழுக்களில் கலந்துரையாடிக் குறிப்புத் தயாரியுங்கள்.
- சாரண, சாரணீயர் செய்யும் சேவைகள் என்னென்ன? பட்டியலிடுங்கள்.

## நான் கற்றுக்கொண்டவை.

| துணைக் கருத்துகள் | மிகநன்றாக | நன்றாக | ஓரளவு |
|---|---|---|---|
| பொன்மொழிகள், பழமொழிகள் திரட்ட முடிந்தது. | | | |
| சிறப்பாகக் கடிதம் எழுத முடிந்தது. | | | |
| குறிப்புகள் எழுத முடிந்தது. | | | |
| தொகுப்பு உருவாக்க முடிந்தது. | | | |


3

# அதிசய உலகம்



'உலகம் உங்கள் உள்ளங்கையில்'

இக்கருத்தின் பொருளை வகுப்பில் கலந்துரையாடுங்கள்.




தினந்தோறும் நீங்கள் படிக்கின்ற வகையில் அன்றலர்ந்த மலர்களாகப் புத்தம் புதியதாகக் கண்ணையும் கருத்தையும் கவரும் விதமாக நாங்கள் வெளிவருகிறோம்.

உலகில் தினந்தோறும் நடைபெறும் நிகழ்வுகள் அனைத்தும் செய்திகளாவது இல்லை. ஆர்வத்தைத் தூண்டுவதும் எதிர்பாராத நிகழ்வுகளும் தான் செய்திகளாகின்றன.

ஏன்? என்ன? எப்போது? எப்படி? எங்கே? யார்? எனும் ஆறுவினாக்களுக்கும் விடை பெறுகின்றபோது நாங்கள் உருவாகிறோம். மனித வாழ்க்கையை ஒட்டியதாகவும், சமுதாய அக்கறை கொண்டதாகவும் அமைவதில் நாங்கள் கவனம் கொள்கிறோம். அத்துடன் படிப்பவர்களுக்குப் பொழுதுபோக்காகவும் உள்ளோம், செய்தியின் இயல்பை ஒட்டி ஆறு வினாக்களுள் எது முன்னுரிமை பெற வேண்டும் என்பதற்கு ஏற்ப முகப்புப் பக்கத்தில் இடம் பெறுகிறோம்.

செய்தியை இனம் கண்ட பின் செய்தியாளர் எங்களைத் திரட்டும் பணியில் ஈடுபடுகின்றனர். அவர்கள் பார்வை யாளராக இருந்து எங்களைத் திரட்டுதல் பொதுவான முறை. விளையாட்டுப் போட்டிகள், புகழ்பெற்ற விசாரணைகள், சட்ட மன்ற நடவடிக்கைகள், மாநாடுகள், பொதுக்கூட்டங்கள் ஆகியவற்றைக் காணச் செய்தி யாளருக்குத் தனி இடம் ஒதுக்கியிருப்பர்.

ஒரு நிகழ்ச்சியில் பங்குபெற்றவர்களைக் கண்டு அவர் களிடம் வினாக்கள் மூலம் எங்களைத் திரட்டுவது ஒரு முறை. இதனைச் சிறப்பாகத் திட்டமிட்டு, நடத்த வேண்டும். எங்களைத் திரட்டுவதற்காகச் செல்லும் செய்தியாளர்கள் ஆழ்ந்தகன்ற அறிவு பெற்றவர்களாக இருப்பர்.

உள்ளூர்ச் செய்தியாளர், வெளியூர்ச் செய்தியாளர், சிறப்புச் செய்தியாளர், ஆர்வலர்கள் மூலமாகவும், அரசு அறிக்கைகள், செய்தி நிறுவனங்கள் மூலமாகவும் நாங்கள் திரட்டப்படுகிறோம்.

செய்தியாளரால் திரட்டப்பட்ட விபரங்கள், நாளிதழ் அலு வலகத்திலுள்ள உதவியாசிரியர்கள் குழுவுக்கு அனுப்பப் படுகின்றன. எங்களின் இன்றியமையாமையை உணர்ந்த உதவியாசிரியர் குழு அதனை உள்வாங்கிக்கொண்டு, நிகழ்வுக்கு ஏற்றவகையில் தலைப்பு உள்ளதா, அதில் கூறப்பட்டுள்ள பொருள் சரியானதுதானா என்பன வற்றைச் சரிபார்த்துத் தேவையேற்படின் தலைப்பிலோ உள்பகுதிகளிலோ திருத்தங்கள் மேற்கொள்வர். இவ்வாறு நாங்கள் வடிவமைக்கப்படுகிறோம்.

தேர்ந்தெடுக்கப்பட்ட நாங்கள் பின்னர், பக்க வடிவமைப் பாளரிடம் செல்கிறோம். அங்கு வடிவமைக்கப்படு கிறோம். முழுமை பெற்ற ஒரு செய்திப்பக்கம் அச்சுப்

பக்கமாக மாறுகிறது. தொடர்ந்து வடிவமைப்புப் பிரிவுக்குச் சென்று அச்சுத் தகடாக மாற்றம் செய்யப் படுகிறோம். அதனைத் தொடர்ந்து அச்சு இயந்திரப் பிரிவுக்கு எடுத்துச் செல்லப்பட்டு, அச்சு இயந்திரத்தில் பொருத்தப்படுகிறோம். பின்னர் அச்சிடப்பட்டுச் செய்தித் தாளில் நாங்கள் வெளிவருகிறோம்.



காலம் கருதி விரைவாக என்னை வெளிக்கொணர வேண்டும் என்பதால் பல்வேறு பதிப்புகளாகச் செய்தித்தாள் வெளிவருகின்றது. முதல் பதிப்பு, இரண்டாம் பதிப்பு, காலைப்பதிப்பு, மாலைப் பதிப்பு, சிறப்புப் பதிப்பு எனப் பதிப்புகள் பிரிக்கப்பட்டு ஏற்ற வேளையில் அனைவருக்கும் கிடைக்கும் வகையில் நாங்கள் தினசரிகளாக அச்சடிக்கப்படுகிறோம். நாள் தோறும் நிகழும் நிகழ்வுகள் வாசகர்களாகிய உங்களுக்குச் சுடச்சுட கிடைக்கும் விதத்தில் செய்திகளாக வெளி வருகிறோம். காலை நீங்கள் அருந்தும் காஃபியுடன் நாங்களும் செய்தித்தாள் வழி சுடச்சுட கண்களால் பருகப்படுகிறோம்.

## செயல்பாடுகள்

- செய்திகள் எவ்வாறெல்லாம் சேகரிக்கப்படுகின்றன? குழுக்களில் விவாதித்துக் குறிப்புத் தயாரியுங்கள். வெளியிடுங்கள்.
- உங்களுக்குத் தெரிந்த செய்தித்தாள்களின் பெயர்களைப் பட்டிய லிடுங்கள்.
- கீழ்க்காணும் சொற்றொடர்களை வாக்கியத்தில் எழுதுங்கள்.
  - சுடச்சுட
  - அன்றலர்ந்த
  - சலசல

## விளம்பரங்கள்

தற்காலத்தில் விளம்பரங்கள் இல்லாத இதழ்களே இல்லை எனலாம். விளம்பரத்தின் நோக்கம் அறிவித்தலாகும். அறிவிப்பு, தெரியப்படுத்துதல் என்ற நிலையை அடையும்போது விளம்பரமாகிறது. ஆனால் நம் தேசத் தந்தை காந்தியடிகள் அன்று விளம்பரமே இல்லாமல் ஒரு இதழை நடத்தினார்!

விளம்பரம் என்பது குறைந்த செலவில், நிறையப் பேருக்கு அவர்களை வாங்கத் தூண்டும் வகையில் கருத்துகளை, பொருள்களை, பணிகளைப் பற்றிக் கவர்ச் சியாகச் சொல்லுகின்ற ஒரு முறையாகும். விளம்பரம் என்பது விளம்பரதாரர் தமது உற்பத்திப்பொருள், பணி ஆகியவற்றின் விற்பனையைப் பெருக்கும் பொருட்டுப் பணம் செலுத்தித் தாம் விரும்பும் விளம்பர ஊடகங் களின் வாயிலாகப் பொதுமக்களுக்கு எடுத்துரைத்தல் என்பதனைக் குறிக்கின்றது.

துண்டுப் பிரசுரங்கள், செய்தித்தாள்கள், இதழ்கள், சுவரொட்டிகள், வானொலி, தொலைக்காட்சி, திரைப்

படங்கள், ஒலிபெருக்கி போன்ற சாதனங்கள் விளம்பரங்களுக்குப் பெரிதும் உதவுகின்றன. வாணிபத்திற்கு மட்டும் பயன்படுவது என்று வரையறை செய்துவிட முடியாதபடி எங்கும் பிரகாசித்து நிற்கிறது விளம்பரம். அமெரிக்க அதிபராக இருந்த ஃபிராங்கிளின் டி ரூஸ்வெல்ட் என்பவர் தன் வாழ்க்கையை மீண்டும் முதலிலிருந்து தொடங்க நேருமானால் மற்ற எந்தத் துறையையும் விட விளம்பரத் தொழில் துறையையே தேர்ந்தெடுத்துக் கொள்வேன் என்றார். இந்த அளவு மனிதனைத் தன் பக்கம் ஈர்த்து வைத்துள்ளது விளம்பரத் துறை.

'அவர்களுக்குச் சொல்லாவிடில் அவற்றை நீ விற்க முடியாது' என்பது விளம்பரக் குறிக்கோள் வாசகமாகும். விளம்பரங்களை வெளியிடுவதில் சில இதழ்கள் சுயகட்டுப்பாட்டைக் கொண்டுள்ளன.

ஆனந்தவிகடன், கல்கி முதலிய இதழ்கள் புகைக்கும் பொருள்கள், மது போன்ற உடலுக்குக் கேடு பயக்கும் பொருள்கள் பற்றி விளம்பரங்களை வெளியிடுவது இல்லை.

விளம்பரங்கள் பார்த்தவுடன் மனதில் பதிந்து நினைவில் நிற்கும் வகையில் அமைதல் வேண்டும். பொருள்களின் தன்மை, பயன்படுத்தும் முறை ஆகிய செய்திகளுடன் இருக்க வேண்டும்.

விளம்பரங்கள் சமுதாய ஒழுக்கம், கண்ணியம், மதச்சம்பிரதாயங்கள் முதலியவற்றைச் சிதைக்காதவாறும், நமது நாட்டின் சட்டத்திட்டங்களுக்கு உட்பட்டும், தொழில் மற்றும் தொழிலாளர் உறவுகளைப் பாதிக்காத வகையிலும் அமைய வேண்டும்.

**– திருமதி . பா. மகேஸ்வரி**

## செயல்பாடுகள்

"கண்ணைக் கவரும் வண்ணமிகு நிறங்களில் புத்தம் புதிய கைத்தறி ஆடைகள்" வாருங்கள்! வாங்கி மகிழுங்கள்!!

இதுபோன்று பல்வேறு நிறுவனங்களின் விளம்பர வாசகங்களைத் திரட்டுங்கள். தொகுப்பாக வெளியிடுங்கள்.

விளம்பரம் என்பது என்ன? உங்கள் கருத்தைச் சொல்லுங்கள்.

விளம்பரங்களுக்கு உதவும் ஊடகங்கள் எவை? எழுதுங்கள்.

துண்டுப்பிரசுரம்

________________, ________________, ________________

________________, ________________, ________________

---


### மூணாறில் கனமழை
### மக்கள் இயல்புவாழ்க்கை பாதிப்பு


மூணாறு, ஜூன் 14: கேரள மாநிலத்தில் தென்மேற்குப் பருவமழை பெய்யத் தொடங்கியது. கடந்த சில நாட்களாக மூணாறு பகுதிகளில் பலத்த காற்றுடன் கன மழை பெய்து வருகிறது. இப்பகுதியில் உள்ள மாட்டுப்பட்டி, குண்டளை, செங் குளம், பண்ணையாறு மற்றும் கல்லார்குட்டி ஆகிய அணைகளில் நீர்மட்டம் உயர்ந்து வருகிறது. தற்போது இங்குச் சராசரியாக ஒரு நாளைக்கு 70 மி.மீ. மழை பெய்து வரு கிறது. ஆகையால் பல இடங்களில் நிலச் சரிவு, சாலை அரிப்பு போன்ற இயற்கை இடர்ப்பாடுகள் ஏற்பட அதிகவாய்ப்புகள் உள்ளன. தொடர் மழையின் காரணமாகத் தேயிலைத் தோட்டங்களில் வேலை நிறுத்தப் பட்டுள்ளது.

மூணாறு நகரில் மக்களின் நடமாட்டம் குறைந் துள்ளதால் வியாபார நிறுவனங்கள் வெறிச் சோடிக் காணப்படுகின்றன. சுற்றுலாப் பயணி களின் வருகையும் பெருமளவில் குறைந் துள்ளது. இதனால் பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.


# அலைபேசியின் கதை!

முப்பது வருடங்களுக்கு முன் வீட்டிற்குத் தொலைபேசி இணைப்பு வேண்டுமென்றால் சுலபத்தில் கிடைக்காது. காத்திருக்க வேண்டும். அப்போதெல்லாம் வீட்டில் தொலைபேசி என்பது பணக்காரர்களுக்கே சாத்தியம். தவிர பெங்களூரில் உள்ள ஒருவரைத் திருவனந்தபுரத்திலிருந்து தொடர்புகொள்ள வேண்டுமென்றால்கூட 'டிரங்க் கால்' புக்கிங் செய்யவேண்டும். இரண்டு நிமிடங்களுக்கு மேல் பேசினால் அவ்வப்போது தொலைபேசி எக்ஸ்சேஞ்சில் வேண்டுகோள் விடுத்து நீட்டிக்க வேண்டும்.






பின்னர் எஸ்.டி.டி. வசதி அறிமுகமானது. என்றாலும் வீட்டுத் தொலைபேசியில் இதற்கான வசதி மிக அரிதாக இருந்தது. எனவே எங்கோ தள்ளி அமைந்த எஸ்.டி.டி. பூத்திற்குச் சென்று காத்திருந்து பேச வேண்டிய கட்டாயம். அதுவும் இரவு ஒன்பது மணிக்கு மேல் பாதிக்கட்டணம் என்பதால் அப்போது பலரும் எஸ்.டி.டி. பூத்தை மொய்ப்பார்கள். சுலபத்தில் இணைப்பு கிடைக்காது.



கம்பித் தொடர்பு இல்லாமல் ஒரு தொலைபேசி இருந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்? பலருக்கும் தோன்றியிருக்கக் கூடிய இந்தக் கேள்விக்கு விடை கிடைத்தது.

1930இல் அலைபேசியின் ஒரு தொடக்க வடிவம் கிடைத்தது எனலாம். 'மோட்டரோலா' நிறுவனத்தைச் சேர்ந்த மார்ட்டின் கூப்பர் என்ற ஆராய்ச்சியாளர் முதல் அலைபேசியைக் கண்டு பிடித்தார்.



இந்த முதல் அலைபேசியின் எடை அதிகமாக இருந்தது. மேலும் கைக்கு அடக்கமாகவும் இருக்கவில்லை. ஒரு நாளைக்குச் சுமார் 30 நிமிடங்கள் தான் பேசமுடிந்தது. அதற்குள் மின்னாற்றல் தீர்ந்துவிடும். மின்னூட்டம் செய்ய 10 மணிநேரத்திற்கும் மேலாகிவிடும்.



தொடக்கத்தில் அலைபேசிகள் தொலைபேசி போல பேசவும், குறுஞ்செய்திகள் அனுப்பவும் மட்டுமே பயன்பட்டன. பிறகு புகைப்படம் எடுக்க, வீடியோ எடுக்க, இணையத்தில் உலவ என்று பல புதிய வசதிகளும் ஏற்பட்டன. இதற்கு மேம்பட்ட அலைக்கதிர்கள் தேவைப்பட்டன. அதாவது அடுத்த தலைமுறை அலைக்கதிர்கள். இரண்டாம் ஜெனரேஷன் என்பதுதான் 2ஜி. 3ஜி என்பது மேலும் மேம்பட்ட அலைக்கதிர். மிக நவீனப் பயன்பாடுகளுக்கு இது தேவைப்படுகிறது. 3ஜி மூலம் குரல் தகவல் மற்றும் குரல் அல்லாத தகவல் ஆகியவை சாத்தியம். 'டெலி மெடிசின்', 'இ-லேர்னிங்' போன்றவற்றிற்கும் 3 ஜி உதவும். இந்தியா பல நாடுகளை விட மெதுவாகத்தான் 3ஜி தொழில் நுட்பத்தைப் பரவலாக்கியிருக்கிறது.






வருங்காலத்தில் 4ஜி தொழில்நுட்பம் இவற்றைப் பின் தள்ளிவிடும். இப்போதைக்கு பல நிறுவனங்கள் 4ஜி தகவல் தொடர்பைப் பரவலாக்கும் சோதனையில் ஈடுபட்டுள்ளன.

## செயல்பாடுகள்


- அலைபேசி பற்றிச் சொற்பொழிவுக் குறிப்புத் தயார்செய்க.
- ஊடகங்களின் படங்களைச் சேகரிக்கவும்; தொகுப்பாக வெளியிடவும்.

## வானத்தில் ஒரு புகைப்படக் கருவி



முந்தைய காலங்களில் மழையின் வருகை, காற்றின் வேகம், வெயிலின் கடுமை போன்றவற்றையெல்லாம் நம் முன்னோர்கள் வானத்தைப் பார்த்துத்தான் தெரிந்துகொண்டார்கள். ஆனால் இன்றைக்கு யாருமே வானத் தைப் பார்த்துக் காலநிலையைச் சொல்வ தில்லை. ஒரு காலத்தில் உள்நாட்டு உறவினர் களிடம் தொடர்புகொள்ளவே பல நாட்கள் தேவைப்பட்டன. இன்றோ வெளிநாட்டில் இருப் பவரோடு தொடர்பு கொள்ளக்கூட நிமிடங்கள் போதும். அயல் நாடுகளில் நடக்கும் கிரிக்கெட் முதலான விளையாட்டுகளை நம் வீட்டிலிருந்தே நேரடியாகக் கண்டுகளிக்க முடிகிறது! அதுமட்டுமல்ல பூமியிலுள்ள நீர்வளம், கனிமவளம், காட்டுவளம் பற்றி அனைத்துச் செய்திகளையும் அறிந்துகொள்ள இன்று வசதிகளும் வாய்ப்புகளும் உள்ளன. இவை அனைத்திற்கும் காரணம் எதுவெனத் தெரியுமா? கேட்டால் வியப்பாக இருக்கும். இதற்கெல்லாம் காரணம் செயற்கைக்கோள் என்னும் சாதனமே! அதென்ன செயற்கைக் கோள்? இயற்கையாகவே பூமியையும் சூரியனையும் சில கோள்கள் சுற்றிக்கொண் டிருக்கின்றன. அவை இயற்கைக் கோள்கள். அதுபோல செயற்கை யாகச் செய்யப்பட்டு புவியிலிருந்து செலுத்தப்பட்ட ஒரு பொருள் புவியைச் சுற்றி வருவதுதான் செயற்கைக் கோள்.

செயற்கைக்கோள்கள் ராக்கெட்டின் உதவியால் வானத்திற்குக் கொண்டு செல்லப்படுகின்றன. ஒரு குறிப்பிட்ட உயரத்திற்குப் போனபின் ராக்கெட்



இந்தச் செயற்கைக்கோளைத் தன்னிடமிருந்து கழற்றி விடும். அதன்பின் இந்தச் செயற்கைக்கோள் 35,000 கிலோ மீட்டர் உயரத்தில் ஒரு குறிப்பிட்ட சுற்று வட்டப் பாதையில் செலுத்தப்படும்.

செயற்கைக்கோள்கள் தகவல் தொடர்புத் தொழில் நுட்பத்தில் மட்டு மல்லாது ஒரு நாட்டினுடைய அனைத்துத் துறைகளுக்கும் உதவி செய்து கொண்டிருக்கின்றன. பூமியை அவ்வப்போது படம் பிடிப்பதோடு காலநிலை, கல்விச் சேவை, மருத்துவச் சேவை, விவசாயத் துறையி லான சேவை மட்டுமின்றிப் பூமியில் காணப்படும் பல்வேறு வளங்கள் பற்றி ஆராய்ச்சி செய்யவும் பயன்படுகின்றன. இன்றைக்கு நாம் நினைத் தவுடனே அமெரிக்காவில் உள்ள ஒருவரோடு பேச முடிகிறதல்லவா? நாம் அனுப்பும் மின்னஞ்சல் தகவல்கள் அடுத்த நிமிடமே உலகின் எந்த ஒரு பகுதிக்கும் போய்ச் சேருகிறது. இத்தனைக்கும் உதவியாய் இருப்பவை செயற்கைக்கோள் களே! கல்வி, வானிலை, பொழுது போக்கு, தகவல் தொடர்பு போன்ற பல்வேறு தேவைகளுக்காகத் தனித் தனி செயற்கைக் கோள்கள் அனுப்பப்படுகின்றன. இந்தியாவும் அதுபோன்ற தேவைகளுக் காகப் பல செயற்கைக் கோள்களை விண்ணில் செலுத்தியுள்ளது.

செயற்கைக்கோள்களை விண்ணில் செலுத்துவது, அவை செய்யும் வேலைகளைக் கண்காணிப்பது ஆகிய அனைத்தும் புவியிலுள்ள கணினிகளின் உதவியுடன் நடைபெறுகின்றன.

## செயல்பாடுகள்

- செயற்கைக்கோள்கள் பற்றி நீங்கள் தெரிந்துகொண்டது என்ன? அவற்றின் சேவைகளைப் பட்டியலிடுங்கள்.
- செயற்கைக்கோள்கள் இல்லாமலிருந்தால் என்ன நிகழும்? எழுதுங்கள்.
- பிழைதிருத்துங்கள்.

  இந்தியா விண்வெலி ஆராய்ச்சியிள் முன்ணேறிக் கொன்டிறுக்கும் நடு. சொவ்வாய் கிறகத்திள் உயிற் வால்க்கை இறுக்கிரதா என்றறிய மங்கல்யான் என்ர செயற்கைக்கோளை உருவாக்கி அனுப் பியுல்ளது.

# வானொலி



எங்கள் வீட்டில் வானொலி! – ஆம்!
எதிர்த்த வீட்டில் வானொலி
சங்கத் தமிழில் பாடுது! – பின்
சரித்தி ரத்தைச் சொல்லுது!

உலகச் செய்தி யாவையும் – நொடி
ஒன்றில் பரவச் செய்யுது!
கலகம், சண்டை தோன்றினால் – அதைச்
கலைத்து நிறுத்தச் சொல்லுது!


பாட்டுப் பாடுது சிலநேரம்! – பின்
பக்திப் பொழிவு சிலநேரம்
நாட்டுப் பாடல் சிலநேரம்! – பின்
நல்ல பேச்சு சிலநேரம்!

கால நிலையும் தெரியுது! – விளை
யாட்டு நிலையும் தெரியுது!
ஏலம், கிராம்பு, பாக்கு, நூல் – விலை
ஏற்றம், இறக்கம் தெரியுது!

இதனைக் கண்டோன் "மார்க்கோனி" – நாம்
இதயத் துள்ளே வாழ்கிறான்!
புதையல் போன்ற விஞ்ஞானம் – அதில்
பொன்னைப் போன்ற வானொலி!

இல்லந் தோறும் வானொலி – இனி
இருக்க வேண்டும் நாட்டிலே!
பள்ளம் மேடு மாறணும் – நாம்
படிப்பில் மிகமுன் னேறணும்!

**– அரு. சோமசுந்தரன்**



## செயல்பாடுகள்

ஏதாவதொரு பத்திரிகைச் செய்தியை வானொலி அறிவிப்பாளரைப் போன்று வாசியுங்கள்.

பொருத்துங்கள்.

| | | |
|---|---|---|
| செயற்கைக்கோள் | - | மார்டின் கூப்பர் |
| வானொலி | - | விண்வெளி வாகனம் |
| ராக்கெட் | - | விளம்பரம் |
| அலைபேசி | - | மார்க்கோனி |
| செய்தித்தாள் | - | விண்வெளி |

பத்திரிகைகளில் வருவது போன்று கல்வி, அரசியல், விளையாட்டு, ஆன்மீகம், வானிலை, உள்நாட்டு, வெளிநாட்டுச் செய்திகளை உட்படுத்திச் செய்தித்தாள் உருவாக்குங்கள். (செய்தித்தாளில் உள்ள செய்திகளை வெட்டி ஒட்டலாம்)

**நான் கற்றுக்கொண்டவை.**

| துணைக் கருத்துகள் | மிகநன்றாக | நன்றாக | ஓரளவு |
|---|---|---|---|
| செய்தித்தாள்களின் பெயர்களைப் பட்டியலிட முடிந்தது. | | | |
| விளம்பர வாக்கியங்கள் அமைக்க முடிந்தது. | | | |
| சொற்பொழிவுக் குறிப்புத் தயாரிக்க முடிந்தது. | | | |

## அகரமுதலி

**அ**

அலுவலர் - அதிகாரி

அறைகூவல் - போருக்கு அழைத்தல்

அன்னம் - உணவு, சோறு

அனாதைகள் - ஆதரவற்றவர்கள்

**ஆ**

ஆர்வலன் - அன்புடையோன்

ஆளுமை - தலைமைப்பண்பு

**இ**

இலட்சியம் - குறிக்கோள்

**உ**

உபதேசம் - அறிவுரை

**ஐ**

ஐயம் - சந்தேகம்

**க**

கலகம் - குழப்பம், சண்டை

கலெக்டர் - மாவட்ட ஆட்சியாளர்

**ட**

டாக்ஸின் - மனித உடம்பிலுள்ள ஒருவகை கழிவு

டியூசன் - தனிப்பயிற்சி

**த**

துயில் - உறக்கம்

**ந**

நொடி - காலநுட்பம்

**ப**

பாஸ்ட்புட் - துரித உணவு

புள்ளைங்க - பிள்ளைகள்

பேட்ஜ் - அடையாள அட்டை

**ர**

ராஜ்ஜியம் - நாடு

**ல**

லீவு - விடுப்பு

**வ**

விஞ்ஞானம் - உண்மை அறிவு

விழுக்காடு - சதவீதம்